# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2017–2018

### மானியக் கோரிக்கை எண். 35


## D. ஜெயக்குமார்

மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2017

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 10 |
| 3 | தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் | 16 |
| 4 | மாநில விழிப்புப் பணி ஆணையம் | 24 |
| 5 | பயிற்சி | 30 |
| 6 | ஆய்வுப் பிரிவு | 45 |
| 7 | முடிவுரை | 48 |

## <u>பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை</u>

## <u>2017–2018 – ஆம் ஆண்டிற்கான</u>

## <u>கொள்கை விளக்கக் குறிப்பு</u>

### 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு, அரசுத் துறைகளில் மனித வளத்தினை சிறப்பான முறையில் பயன்படுத்திட, 1976–ஆம் ஆண்டு பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையை உருவாக்கியது. இத்துறை இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது:–

i. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
ii. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை.

மனிதவள மேம்பாட்டின் அத்தியாவசியப் பணிகளான பணியாளர்களைத் தெரிவு செய்தல், பயிற்சியளித்தல், ஊக்குவித்தல், பதவி உயர்வு வழங்குதல் மற்றும் அரசு ஊழியர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியவற்றை திறம்பட நிருவகிப்பது பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் பணியாகும். இவற்றோடு, தலைமைச் செயலக

அலுவல்களை வடிவமைத்தல் மற்றும் அரசுப் பணியாளர் நலன் ஆகியவற்றில் இத்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது.

இத்துறை ஆற்றிவரும் முக்கிய பணிகள் பின்வருமாறு :–

அ. <u>அறிவுரை வழங்குதல்</u>

இத்துறை, தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பின்வரும் இனங்களில் தலைமைச் செயலகத் துறைகளுக்கு அறிவுரை வழங்குகிறது:–

i. தமிழ்நாடு மாநிலப் பணிகள் மற்றும் தலைமைச் செயலகப் பணிகளில் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கான காலிப்பணியிட மதிப்பீடு தயார் செய்தல், அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.

ii. அரசுப் பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவத்தினை விளம்புதல் தொடர்பான சிறப்பு விதிகள் / தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ன் உரிய பிரிவுகளைத் தளர்த்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்தல்.

iii. அடிப்படை விதிகள் குறித்த தெளிவுரைகள் வழங்குதல்.

iv. பணி முதுநிலையை மாற்றியமைத்தல் குறித்த கருத்துருக்களை விதிக்கூறுகளின் படி ஆய்வு செய்தல்.

ஆ. <u>சட்டரீதியான பணி</u>

பணி தொடர்பான பின்வரும் சட்டரீதியான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவை இத்துறையால் நிருவகிக்கப்படுகின்றன:–

1. பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை மாநில அரசுப் பணியாளர்களின் பணிவிதிகள் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக):-

   i. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 (2016 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டம் எண். 14.)

ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.

iii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.

iv. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்.

v. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

vi. தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான சிறப்பு விதிகள்.

vii. தமிழ்நாடு அடிப்படைப் பணிகளுக்கான சிறப்பு விதிகள்.

viii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு விதிகள் – இனம் XXII.

2. தலைமைச் செயலகத்திற்கான விதிகள்:–

i. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளுக்கான சிறப்பு விதிகள்.

ii. தமிழ்நாடு பொதுப்பணிகளுக்கான சிறப்பு விதிகள் – இனம் XII மற்றும் XII-A

iii. தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.



3. பிற அமைப்புகள் தொடர்பான விதிகள்:–

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954.

ii. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005.

iii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீடு நடைமுறை) விதிகள் 2012

iv. தமிழ்நாடு தகவல் ஆணைய பணிவிதிகள் 2017.

4. அரசு அலுவல்கள்:–

இத்துறை, தமிழ்நாடு அரசின் அலுவல் விதிகளை, தலைமைச் செயலக அளவில் நிருவகிக்கிறது. அவை:–

i. தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்; மற்றும்

ii. அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.

இ. <u>நிருவாகப் பணி</u>

இத்துறை மேற்கொள்ளும் பணிகளாவன,

i. தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையின் (One Unit System) கீழ்வரும் அரசு சார்புச் செயலாளர்களின் பணிநிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு.

ii. பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அரசு பணியாளர்களின் குறைகளைக் களைதல் .

iii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மாநில தகவல் ஆணையம் ஆகியவற்றின் பணியமைப்பு தொடர்பான நிருவாகப் பணிகள்.

ஈ. <u>இதரப் பணிகள்</u>

1. பயிற்சியளித்தல்,

i. பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் / துணை வட்டாட்சியர்களுக்குரிய பயிற்சி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச்



சீர்திருத்தத் (ஆய்வு) துறை மூலமாக அனைத்து மாவட்ட தலைமையகங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

ii. முதுநிலை / உயர்நிலை அளவிலான அலுவலர்களுக்கு சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி அளித்தல்.

iii. புதிதாக நியமனம் செய்யப்பட்ட தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி.

2. பின்வரும் அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள் / இயக்குநரகங்கள் தொடர்பான பணியமைப்பு / அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தருதல் தொடர்பான பணிகள் இத்துறையால் கையாளப்படுகின்றன :

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ii. தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்.

iii. மாநில விழிப்புப் பணி ஆணையம்

iv. பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

3. அரசுப் பணியாளர் நலன்

அரசு பணியாளர் நலனுக்கு அரசு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது. பணிவரன்முறை, தகுதிகாண் பருவம் நிறைவு செய்தல், பணி மூப்பு, பதவியுயர்வு, ஊதிய முரண்பாடு போன்ற அரசுப் பணியாளர்களின் பணி சார்ந்த கோரிக்கைகள், மிகுந்த அக்கறையுடன் உரிய நடவடிக்கைகளின் மூலம் குறித்த காலத்தில் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காண அரசு முனைப்புடன் செயல்படுகிறது. அரசுப் பணியாளர்களின் குறைகளைக் களையும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவர்களின் முழு ஒத்துழைப்பினை உறுதி செய்கிறது.

4. மின் ஆளுகை

தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களும், நடவடிக்கைகளும் எளிதாகவும், திறமையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் மக்களுக்கு கொண்டு சேர்க்கப்படுகின்றன. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் நிருவகிக்கப்படும் விதிகள் மற்றும் சட்டங்கள்



அனைத்தும் மின் தகவல்களாக தொகுக்கப்பட்டு, அரசு வலைதளத்தில் 'www.tn.gov.in' வெளியிடப்படுவதன் மூலம் வெளிப்படையான மற்றும் திறமையான ஆளுகையை உறுதி செய்கிறது. இத்துறையினால் வெளியிடப்படும் முக்கியத்துவம் வாய்ந்த அரசாணைகளை கொண்ட மின்னணுத் தகவல் தொகுப்பு (Electronic Compendium) தலைமைச் செயலக குறும்பரப்பு வலைதளத்தில் பதிவேற்றப்படுகிறது. மின்னணுக் கோப்பு கையாளும் முறையின் கீழ் [Electronic File Processing System (EFPS)], கணினிமயமாக்கப்பட்ட அஞ்சல் பகிர்வு முறை, தன்பதிவேடு பதிவு செய்தல் / கண்காணித்தல் ஆகியவை, தேசிய தகவலியல் மையத்தின் (NIC) மூலமாக இத்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பணியாளர் தகவல் முறையில் (Personnel Information System – PINFOSYS) தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் / பணியாளர்களது பணி தொடர்பான விவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

5. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு

அரசின் பல்வேறு துறைகளில் பின்பற்றப்படும் வழிமுறைகளையும், நடைமுறைகளையும் உரிய நுண்ணாய்வுகளை மேற்கொண்டு எளிதாக்கும் பொருட்டு, ஏற்படுத்தப்பட்ட 'அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு', 233 ஆய்வறிக்கைகளை உரிய தொடர் நடவடிக்கைக்காக தொடர்புடைய அலுவலகங்களுக்கு அனுப்பியுள்ளது.

2. **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை, பூங்கா நகர், வ.உ.சி. நகரில் இயங்கி வருகிறது.

அ) அமைப்பும் பணிகளும்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளைச் சுயமாகவும், நேர்மையாகவும், பாகுபாடின்றியும் செயல்படுத்தும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)–ன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக்



கொண்டதாகும். தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிமுறைமைகள், 1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளால் நிருவகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடமைகள் மற்றும் செயல்பாடுகளாவன ;

i. பணியாளர்களை தேர்வு செய்யும் பணியை முதன்மையாக ஆற்றுதல்.

ii. பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

iii. அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளை நடத்துதல்.

iv. டேராடூனில் உள்ள இந்திய இராணுவக் கல்லூரியில் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வுகளை ஆண்டிற்கு இருமுறை, மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாக நடத்துதல்.

ஆ) தேர்வு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சீர்திருத்தங்கள்

தேர்வாணையம் தேர்வு முறைகளில் முழு வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்திடவும், பணிநியமனம் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்திடவும் ஒவ்வொரு கட்டத்திலும் நடைமுறைப்படுத்தியுள்ள பல்வேறு சீர்திருத்தங்கள் பின்வருமாறு;

i. விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் தேர்வுகளுக்கு தங்களை முன்னதாக தயார் செய்து கொள்ள ஏதுவாக ஒவ்வொரு ஆண்டும் போட்டி தேர்வுக்கான நேரடி தேர்வுத் திட்ட ஆண்டு அட்டவணையை ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிடும் திட்டம் அறிமுகம்.

ii. தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும், பயன்பாட்டிற்கு எளிதாக



உள்ளவாறு, இணையதளம் வழியே விண்ணப்பிக்கும் முறை மற்றும் விண்ணப்பதாரர்களின் விவரங்கள் அடங்கிய நிரந்தர தரவு தளமாக அமையும் வகையில் ‘ஒரு முறை பதிவு செய்யும் வசதி’ அறிமுகம்.

iii. தொழில்நுட்பப் பதவிகளுக்கு கணினிவழி தேர்வுகள் அறிமுகம்.

iv. தேர்வுக்கூடங்கள் அனைத்தையும் இணையதள ஒளிப்பதிவு கருவிகள் / தொடர் ஒளிப்பதிவு கருவிகளின் வழியாக கண்காணித்தல்.

v. துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கான கருத்துருக்களுக்கு ‘ஒற்றைச் சாளர முறை’ அறிமுகம்.

vi. மாற்றுத் திறனாளிகள் தேர்வுக் கூடங்களுக்கு எளிதில் செல்லவும், தேவைப்படின் அவர்களுக்கு உதவியாளர்களை அளிக்கவும் வசதி.

vii. பணி மற்றும் அலகு ஒதுக்கீட்டில் வெளிப்படைத் தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு கலந்தாய்வு முறை அறிமுகம். காலிப்பணியிடம் குறித்த விவரங்கள் முன்கூட்டியே இணையதளத்தில் வெளியிடுதல்.

இ) சாதனைகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மே 2016 முதல், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–I – முதன்மை தேர்வு), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி-II அ), தொகுதி–4 தேர்வுகள், சென்னை உயர்நீதிமன்ற பணிகளுக்கான தேர்வுகளை நடத்தியது. இவற்றுடன், தாய் சேய் நல அலுவலர், ஆராய்ச்சி உதவியாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தில் நூலகர், எல்காட் துணை மேலாளர், தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் பொது முதலாள் / தொழில் நுட்ப உதவியாளர், இளநிலை அறிவியல் அலுவலர், உதவி சிறை அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மீன்வளத்துறை உதவி இயக்குநர், இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித்துறை செயல் அலுவலர்– நிலை III, கிராம நிருவாக அலுவலர் ஆகிய பதவிகளுக்கான தேர்வுகளும் தேர்வாணையத்தால் நடத்தப்பட்டுள்ளன.



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடந்த 23.05.2016 முதல் 08.06.2017 வரை பல்வேறு பதவிகளில் 9,033 காலிப் பணியிடங்களுக்கான இறுதி முடிவினை வெளியிட்டுள்ளது .

ஈ) தேர்வுத் திட்ட ஆண்டு அட்டவணை – 2017–2018

01.02.2017 அன்று தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட 2017–2018 ஆம் ஆண்டிற்கான தேர்வுத் திட்ட ஆண்டு அட்டவணைப்படி ஒருங்கிணைந்த பொறியியல் பணியில் அடங்கிய தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர், மருத்துவச் சார்நிலைப் பணியில் அடங்கிய புள்ளியியலாளர், கிராம நிர்வாக அலுவலர், கல்லூரி கல்விப்பணியில் அடங்கிய நூலகர், இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித்துறை செயல் அலுவலர் – நிலை–I, மருத்துவச் சார்நிலைப் பணியில் அடங்கிய இளநிலை பகுப்பாளர், தொகுதி–1 அ – ல் அடங்கிய உதவி வனப் பாதுகாவலர், தோட்டக்கலை பணியில் அடங்கிய தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் தொகுதி–4–ல் அடங்கிய பதவிகள் ஆகியவற்றிற்கான தேர்வுகள் குறித்த அறிவிக்கைகள் வெளியிடப்படவுள்ளன.

### 3. தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்

2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 15(1)–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது. மாநில தலைமைத் தகவல் ஆணையர் ஒருவர் மற்றும் மாநில தகவல் ஆணையர்கள் ஆறு பேர் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள ஆணையத்தின் செயல்பாடுகளில் உதவி புரிய ஒரு செயலாளர், ஒரு பதிவாளர், ஒரு சட்ட அலுவலர் மற்றும் இதர பணியாளர்கள் உள்ளனர். ஆணையம், சென்னை, தேனாம்பேட்டையில் இயங்கி வருகிறது. இச்சட்டத்தின் கீழான அதிகாரத்தைப் பயன்படுத்தி தனக்களிக்கப்பட்ட பணிகளை ஆணையம் நிறைவேற்றுகிறது. சட்டத்தின் பிரிவு 15(4)–ன்படி, ஆணையத்தின் நடவடிக்கைகள் மீதான பொதுக் கண்காணிப்பு, மேலாட்சி மற்றும் அலுவல் மேலாண்மை, மாநில தலைமைத் தகவல் ஆணையரின் ஆளுகைக்கு உட்பட்டதாகும்.





இச்சட்டம், பொது அதிகார அமைப்புகளின் வரம்பிற்குட்பட்ட தகவலை குடிமக்கள் பெறுவது பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புடைமையையும் மேம்படுத்துவது மற்றும் ஊழலை தடுப்பது ஆகியவற்றை குறிக்கோள்களாகக் கொண்டுள்ளது.

அ. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கம்

அரசியலமைப்பினாலோ அல்லது அதன் வழியாலோ நாடாளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டம் அல்லது அரசினால் வழங்கப்பட்ட அறிவிக்கையினாலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணையினாலோ நிறுவப்பட்ட அல்லது அமைத்து உருவாக்கப்பட்ட அதிகார அமைப்பு அல்லது குழுமம் அல்லது தன்னாட்சி நிறுவனம் ஆகியவை இச்சட்டத்தின் வரம்பிற்குள் வரும். அரசினால், சொந்தமாகக் கொண்டிருக்கப்பட்ட, வரம்பிற்குட்பட்ட அல்லது பெருமளவில் நிதியுதவி அளிக்கப்படுகிற குழுமம் அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெருமளவில்

நிதியுதவி அளிக்கப்படும் அரசு சாரா அமைப்புகளும் இச்சட்டத்தின் வரம்பிற்குள் வரும்.

எந்த ஒரு பொது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது அதன் வரம்பிலுள்ள தகவல் எவ்வடிவில் இருந்தாலும் அவற்றை தாளிலோ, அல்லது மின்னணுப் பதிவு முறையிலோ அல்லது மாதிரிகளாகவோ அல்லது வடிவமைப்பின் பிரதிகளாகவோ தகவலைப் பெற குடிமக்கள் அனைவரும் உரிமையுடையவர் ஆவர். மேலும், ஆவணங்கள், பதிவுருக்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றை பார்வையிடலாம்.

ஆ. தகவலை தானாகவே வெளியிடுதல்

தகவல் பெறுவதை எளிதாக்கும் வகையில் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அதன் பதிவுருக்கள் அனைத்தையும் உரிய வகையில் வரிசைப்படி தொகுத்து பட்டியலிட்டு வைத்து வருதல் இச்சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பு, செயற்பணிகள், கடமைகள் மற்றும் இதர விவரங்களையும் வெளியிடுதல் வேண்டும்.



இ. தகவல் பெறும் வழி

ஒவ்வொரு பொது அதிகார அமைப்பும் அவற்றின் ஒவ்வொரு அலுவலகம் அல்லது அதன் ஒவ்வொரு அலகிலும் பொது தகவல் அலுவலர்களை நியமிக்கும். குடிமக்கள் தகவல் கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் 30 நாட்களுக்குள்பதில் அனுப்ப வேண்டும். இச்சட்டத்தின்படி, விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர பிற இனங்களில் குடிமக்கள் தகவல் பெறலாம். பதில் வழங்கப்படவில்லை என்றாலோ அல்லது விண்ணப்பதாரர் தமக்கு வழங்கப்பட்ட பதிலில் திருப்தியில்லை என்றாலோ சம்மந்தப்பட்ட துறையில் குறிப்பிடப்பட்ட மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

ஈ. கட்டண விகிதங்கள்

விண்ணப்பம் செய்வதற்கும் ஆவணங்களின் நகல்களைப் பெறுவதற்கும் அல்லது பார்வையிடுவதற்கும் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் குறித்து தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டம் (கட்டணங்கள்) விதிகள், 2005–ல் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கட்டண விகிதங்கள் நாட்டிலேயே குறைந்த அளவில் உள்ளது.

மேல்முறையீட்டு அலுவலரிடம் செய்யப்படும் முதலாவது மேல்முறையீடு மற்றும் ஆணையத்திற்கு செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீடு ஆகியவற்றிற்கு கட்டணம் ஏதும் இல்லை. இச்சட்டத்தின் பிரிவு 7 (5)–ன்படி வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள விண்ணப்பதாரர்கள் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை.

உ. மேல்முறையீட்டு நடைமுறைகள்

தகவல் ஆணையத்திற்கு செய்யப்படும் இரண்டாம் மேல்முறையீடுகளில், மேல்முறையீடு செய்பவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் அவற்றின் மீது தீர்வு காண்பது குறித்த நடைமுறைகள் ஆகியன தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012–ல் அடங்கியுள்ளன.

ஊ. பணி விதிகள்

தகவல் ஆணையத்தில் பணி புரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தொடர்பான பணி நிபந்தனைகள், தமிழ்நாடு தகவல் ஆணைய பணி விதிகள், 2017–இன் படி நிருவகிக்கப்படுகின்றது.



எ. ஆணையத்தால் வழங்கப்படும் சிறப்பு வசதிகள்

i. காது கேட்கும் திறன் மற்றும் பார்வை குறைபாடு உடையவர்களின் வேண்டுகோளின் பேரில் இவ்வாணையத்தின் விசாரணையின்போது அவர்களுக்கு உதவி புரிய எவர் ஒருவரின் உதவியையும் நாடலாம். பார்வை குறைபாடு உடையவர்களிடமிருந்து தனிப்பட்ட வகையில் கோரிக்கை பெறப்பட்டால் ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகள் ஆகியவற்றை நாட்டிலேயே முதன்முறையாக பிரெய்லி முறையில் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ii. ஆணையத்தில் மேல்முறையீடுகள் பெறப்பட்ட விவரம் மற்றும் அவற்றின் பதிவு குறித்த தகவலை 'குறுந்தகவல் சேவை' மூலம் அளிக்கும் வசதி, ஆணையத்திடம் செய்யப்படும் இரண்டாம் மேல்முறையீடு குறித்த வழக்குப் பட்டியல் மற்றும் அவற்றின் மீதான ஆணையத்தின் முடிவுகள் மற்றும் புகார்கள் ஆகியவற்றின் விவரங்களை இணையதளத்தின் மூலம் அறியும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

iii. இரண்டாம் மேல்முறையீடு அல்லது புகார் மீதான விசாரணைகள் பொதுவாக ஆணையத்தின் அலுவலகத்திலும், தொலைதூரத்தில் உள்ள மனுதாரர்களின் வசதிக்கேற்ப மாவட்ட தலைமையிடங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. வழக்கு விசாரணைகள் மேற்கொள்ள காணொளி காட்சி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

ஏ. உள்கட்டமைப்பு மேம்படுத்துதல்

தகவல் ஆணையத்திற்கு கணினி மற்றும் உபகரணங்கள் வாங்கும் பொருட்டு ரூ.5.00 லட்சமும் ஆணையத்தின் வலைதளத்திற்கென 8 Mbps வேகத்தில் செயல்படக்கூடிய தனிப்பட்ட இணைப்பினை (dedicated lease line) பெறும் பொருட்டு ரூ.8.90 லட்சமும் ஒப்பளிக்கப்பட்டது. 2016-17 -ஆம் நிதியாண்டில், ஆணையத்தின் செயல்பாடுகளை முற்றிலும் கணினிமயமாக்கல் மற்றும் இணையதளம் வழியாக இரண்டாம் மேல்முறையீடு செய்தல் ஆகியவற்றிற்கென ரூ 29.34 லட்சம் ஒப்பளிக்கப்பட்டது.



ஐ. தகவல் பெறும் உரிமை வார விழா :

2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் "தகவல் பெறும் உரிமை வாரம்" ஆணையத்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் நடத்தி கொண்டாடப்பட்டது:-

i. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் முக்கிய கூறுகளை பொது மக்கள் அறியும் வண்ணம், துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

ii. மாநிலத்திலுள்ள 7 சட்டக் கல்லூரிகளில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் குறித்த கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

iii. தகவல் பெறும் உரிமைச் சட்டம் குறித்து, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்ட பயிலரங்கில், பயனாளிகள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

ஒ. ஆண்டறிக்கை

ஆணையத்தின் ஆண்டறிக்கை மாநில சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

**4. மாநில விழிப்புப் பணி ஆணையம்**

'ஊழல் தடுப்புக்கான சந்தானம் குழு'வின் பரிந்துரையின் அடிப்படையில், 1965–ம் ஆண்டு தமிழ்நாடு மாநில விழிப்புப் பணி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

பொதுப் பணிகளில் நிருவாக ரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், வெளிக்கொண்டு வரப்பட்ட தனி இனங்களில் காணப்படும் ஊழல் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான நோக்கங்களாகும்.

மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளாவன:–

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டார் அல்லது ஊழல்



புரிந்துள்ளார் என சாட்டுரைக்கப்படுகின்ற அல்லது சந்தேகப்படும் வகையில் நடந்துள்ளார் எனில் அவர் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

(ii) பொது ஊழியர் தன்னுடைய அதிகாரத்தை தவறாக அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதற்காகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமல் இருந்ததற்காகவோ கூறப்படும் புகார் மீது விசாரணை / புலனாய்வு மேற்கொள்ளுதல்.

(iii) தேவைப்படும் தகவல் அல்லது புள்ளி விவரங்களை சேகரித்தல்.

(iv) தன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட செயல்பாடுகளில் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

அ. மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகார வரம்பு

மாநில விழிப்புப் பணி ஆணையம் பின்வருவனவற்றின் மீது அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது :–

i. மாநில அரசின் பொது / அரசு ஊழியர்கள்.
ii. மாநில அரசின் சட்டபூர்வ அமைப்புகள், கழகங்கள், நிறுவனங்களின் ஊழியர்கள்.
iii. பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் உள்ளிட்ட அனைத்து பொது ஊழியர்கள்.

ஆ. ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்ககம்

**1964**–ஆம் ஆண்டில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் உருவாக்கப்பட்டது. விழிப்புப் பணி ஆணையத்திற்கு கீழ் வரும் பணிகளில் உதவி புரிவதில் பெரும் பங்காற்றி வருகிறது ;

i. மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் உத்தரவின் பேரில், ஊழல் குற்றச்சாட்டுகள், அதன் தொடர்பான தவறான நடத்தைகள் மற்றும்



பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் ஆகியவற்றின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

ii. இவ்வியக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல்களையும், புள்ளி விவரங்களையும் அளித்தல்.

iii. இலஞ்ச ஊழல் முறைகேடுகளை கண்டறிவதற்காக நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, ஊழல் தடுப்புச் சட்டம், **1988**–இன் கீழ் அமையும் குற்றங்களை புலனாய்வு செய்தல்.

குறிப்பான புகாரின் பேரில், ஊழல் புரியும் அரசு ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது வலிமையான தடுப்பு நடவடிக்கையாக அமைகிறது.

ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் **8** சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசு அலுவலர்கள் மீதான ஊழல் புகார்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள, ஒவ்வொரு துறையிலும் இரண்டாம் நிலை அலுவலர் ஒருவரை கண்காணிப்பு அலுவலராக நியமிக்க அனைத்து துறைத் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த, ஆண்டுதோறும் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் இத்துறையின் சார்பாக காட்சி அரங்கு அமைக்கப்பட்டு வருகிறது. அவ்வரங்கில், ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் கொண்ட பதாகைகள், காணொளி காட்சிகள், பாடல்கள் ஒலித்தல், பொது மக்களை உறுதிமொழி ஏற்க வைத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவ்வியக்ககத்தின் செயல்பாடுகள் குறித்து அதன் உயர் அதிகாரிகள் பொது மக்களுக்கு விவரிக்கின்றனர்.



பொது மக்களிடையே அரசின் ஊழல் தடுப்புக் கொள்கை குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அனைத்து அரசு அலுவலகங்களிலும் **“லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம்”** என்ற தகவலும், ஊழல் குறித்த புகார்களை, இயக்ககத்தின் சென்னை அலுவலகத்தில் அல்லது உள்ளூர் அலுவலகங்களில் அளிக்கலாம் என்ற தகவலும் வெளியிடப் படுகிறது.

இ. ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் அரசு ஊழியர்கள் மீது சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய ஏற்படுத்தப்பட்ட அமைப்பே ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயம், அவ்வாறு சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையின் பொருட்டு, தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோரவும் நீதிமுறை சார்புடைய அதிகாரங்களைப் பெற்ற அமைப்பாகும். தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகள், 1955–இல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் இத்தீர்ப்பாயங்கள் விசாரணை மேற்கொள்கின்றன.

தற்போது, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் செயல்படும் இத்தீர்ப்பாயங்களில் வழக்கு தொடர்பான விசாரணைக்கு ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான அரசு வழக்குரைஞர்கள் உதவுகின்றனர். வழக்கின் விசாரணை அறிக்கை, இறுதி ஆணை பிறப்பிக்கும் பொருட்டு அரசின் தொடர்புடைய நிர்வாகத் துறைக்கு அனுப்பப்படும்.

### 5. பயிற்சி

பயிற்சி என்பது, ஒருவரது பணியினை திறம்பட செயல்படுத்துவதற்கு இன்றியமையாத அறிவு மற்றும் பணித்திறனை அளித்து, அவரது பணி செய்யும் திறனை மேம்படுத்தத் தேவையானதொரு பயிலும் அனுபவமாகும். அரசுத் திட்டங்களின் பயன்களை பொது மக்களுக்கு கொண்டு சேர்ப்பதிலுள்ள பல்வேறு நடைமுறை சிக்கல்களை அறிந்து, அவற்றிற்கு பயனுள்ள மற்றும் சிறப்பான தீர்வுகள் காண, அரசு அலுவலர்களுக்கு



பயிற்சி தேவையானதாகும். பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை, புதிதாக நியமனம் பெற்ற அரசுப் பணியாளர்களுக்கு அரசின் பல்வேறு விதி மற்றும் விதிமுறைகள் தொடர்பான 'பணி அறிமுகப் பயிற்சி'–யை வழங்குகிறது. பணியாளர்கள் அலுவலகப் பணிகளை ஆர்வமுடன் மேற்கொள்ள 'மனிதவள மேலாண்மை' மற்றும் 'தனிநபர் திறன் மேம்பாடு' போன்ற தலைப்புகளில் மேலாண்மை பயிற்சிகளையும் இத்துறை வழங்குகிறது. மேலும், குடிமைப்பணி போட்டி தேர்வுகளுக்கு பயிற்சி பெறும் இம்மாநிலத்திலுள்ள மாணவர்கள் தேசிய அளவில் போட்டியிட்டு தேர்ச்சி பெறுவதற்கு சிறப்பான பயிற்சியும் இத்துறை வாயிலாக வழங்கப்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் தேவையை இவ்வாறாக இத்துறை பூர்த்தி செய்கிறது.

தலைமைச் செயலகத்தில் பல்வேறு பணி இடங்களுக்காக தேர்ந்தேடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி)த் துறையின் தலைமைச் செயலக பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாநிலத்தின் பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, பயிற்சித் துறைத் தலைவர் தலைமையில் ஒரு தனி இயக்ககம் அமைக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலக பயிற்சி நிலையம்

இப்பயிற்சி நிலையத்தில், தலைமைச் செயலக துறைகளில் நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கு பொது நிருவாக விதிமுறைகள் மற்றும் நிதி நிருவாக விதிமுறைகள் குறித்து அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை 93 அணிகளுக்கு தலைமைச் செயலக பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்து உதவிப் பிரிவு அலவலர்களுக்கும் அவர்களது திறனை மேம்படுத்தும் நோக்கோடு பல்வேறு விதிகள் / நெறிமுறைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை விதிகள் குறித்த புத்தாக்கப் பயிற்சியும் இந்நிலையத்தின் மூலம் அளிக்கப்படுகிறது.



மத்திய செயலக பணி அலுவலர்களுக்கு பணி நிலை பிரிவுப் பயிற்சி

மத்திய செயலக பணியைச் சேர்ந்த சார்புச் செயலாளர்கள் / பிரிவு அலுவலர்களுக்கு, அவர்களின் பணி நிலை பிரிவுப் பயிற்சியின் (Cadre Training) அங்கமாக, மாநில அரசுத் துறைகளில் பயிற்சி பெறுவதை மத்திய அரசு சேர்த்துள்ளது. இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக இதுவரை மத்திய செயலக பணியைச் சேர்ந்த 18 சார்புச் செயலாளர்கள் / பிரிவு அலுவலர்களை, மாநில அரசின் பல்வேறு துறைகளில் பயிற்சி பெறும்பொருட்டு மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு இது வரை இரண்டு அணிகளை அனுப்பியுள்ளது. இவ்வாறு அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு 10 வார கால தீவிர பயிற்சி வழங்கப்படுகிறது. மாநில அரசின் செயல்பாடுகளை புரிந்துகொண்டு, மத்திய–மாநில அரசுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை உறுதி செய்து, அரசுத் திட்டங்களை செம்மையாக செயல்படுத்துவது இப்பயிற்சியின் நோக்கமாகும்.

பயிற்சித் துறைத் தலைவர்

துறைத் தலைவராக செயல்படும் பயிற்சித் துறைத் தலைவருக்கு துணை ஆட்சியர் மற்றும் அலுவலர்கள் உதவி புரிகின்றனர். அண்ணா மேலாண்மை நிலையத்தின் இயக்குநர், அலுவல்வழி பயிற்சித் துறைத் தலைவர் ஆவார்.

கீழ்காணும் நான்கு பயிற்சி நிறுவனங்கள், பயிற்சித் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

I. அண்ணா மேலாண்மை நிலையம்

II. 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்

III. அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம்

IV. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

I. அண்ணா மேலாண்மை நிலையம்

தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம், 1975–ன் கீழ் அண்ணா மேலாண்மை நிலையம் 1981–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அமைச்சுப் பணியைச் சார்ந்த



பணியாளர்கள் முதல் அகில இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் வரை அனைத்துத் தரப்பு அரசு அலுவலர்களுக்கும் பயிற்சி தரும் முதன்மை நிறுவனமாக அண்ணா மேலாண்மை நிலையம் விளங்குவதால், தமிழக அரசும், மத்திய அரசும் இதனை மாநில நிர்வாகப் பயிற்சி நிறுவனமாக அங்கீகரித்துள்ளன.

2016–2017 ஆம் ஆண்டில், மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மண்டல மையங்களையும் சேர்த்து அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை, 421 பயிற்சி வகுப்புகளை நடத்தி 12,750 அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

"பொது மேலாண்மை" பயிற்சிகள் தவிர நல் ஆளுமை, மனித உரிமைகள், பாலின விழிப்புணர்வு, பேரிடர் மேலாண்மை, தகவல் பெறும் உரிமைச் சட்டம், நகர்புற வடிவமைப்பு மற்றும் மேலாண்மை, அரசு நிறுவனங்களில் முழுமையான தர மேலாண்மை, மின் ஆளுமை மற்றும் தகவல் தொழில்நுட்பம், வழக்காடல் மேலாண்மை, குடிமக்களை மையப்படுத்திய நிர்வாகம் ஆகிய தலைப்புகளில் சிறப்பு பயிற்சிகளையும் இந்நிலையம் அளித்துவருகிறது.

மேலும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவை கழகம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம், வணிகவரித் துறை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், புது தில்லியிலுள்ள இந்திய பொது நிருவாக நிலையம் போன்ற துறைகள் மற்றும் நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் தேவையின் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர் அவர்களை தலைவராகவும், பயிற்சி, கல்வி ஆகியவற்றில் திறமை வாய்ந்த பிற ஆன்றோர்கள் மற்றும் மூத்த அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு இந்நிலையத்தின் கொள்கை அளவிலான முடிவுகளை எடுத்து வருகிறது.

**2016–2017–ஆம் ஆண்டில் அண்ணா மேலாண்மை நிலையத்தால் நடத்தப்பட்ட சிறப்புப் பயிற்சிகள்**

- 2015 ஆம் ஆண்டு தகுதிகாண் பருவத்திலுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு, மாநில தலைமையிடத்து பயிற்சி மற்றும் அரசின் கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களின் மீதான



அரசு செயலர்கள் மற்றும் துறைத் தலைவர்களால் கையாளப்பட்ட அறிமுகப் பயிற்சி.

- 2015 ஆம் ஆண்டு தகுதிகாண் பருவத்திலுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு, 'J-PAL, தெற்கு ஆசியா' அமைப்போடு ஒருங்கிணைந்து "அளவுகள் மற்றும் நில அளவை வடிவமைப்புக்கான அறிமுகம்" என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை.
- "மாநிலத்தில் மின் ஆளுமை மயமாக்கும் முயற்சிகளின் நிலை குறித்த விவாதம்" என்ற தலைப்பில் 42 இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் கலந்து கொண்ட பயிலரங்கம்.
- தமிழ்நாடு காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறும் தகுதிகாண் பருவத்திலுள்ள இந்திய காவல் பணி அலுவலர்களுக்கு "நில வருவாய் சட்டம்" என்ற தலைப்பில் அறிமுகப் பயிற்சி
- வருவாய் உதவியாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை ஆட்சியர்கள் ஆகியோருக்கு "பேரிடர் மேலாண்மை" குறித்து மதுரை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நடத்தப்பட்ட பயிற்சி.

- "பொது–தனியார் கூட்டுப் பங்கு மாதிரிகள்", "பொது கொள்முதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வெளிப்படையான முறைகள்" மற்றும் "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023" ஆகிய தலைப்புகளில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய நிதியுதவியுடன் ரூ.1.72 கோடி செலவில் பயிற்சி.

- மத்திய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்பட்ட அனைத்து தென் மாநிலங்களைச் சேர்ந்த நிருவாகப் பயிற்சி நிலையத்தின் தலைவர்கள் மற்றும் வல்லுநர்கள் கலந்து கொண்ட "பயிற்சியில் சிறப்பு குறித்த தென் மண்டலங்களுக்கான முதல் மண்டல கருத்தரங்கு" (RSET).

- கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசின் ரூ.63.00 இலட்சம் நிதியுதவியுடன் புதியதாக நியமனம் செய்யப்பட்ட 350 "சி" தொகுதி அரசுப் பணியாளர்களுக்கு பணி அறிமுகப் பயிற்சி.



- மத்திய அரசு, புது தில்லியிலுள்ள இந்திய பொது நிருவாக நிலையத்துடன் இணைந்து, "மின் ஆளுகை– மின்னனு இந்தியா கட்டமைப்பு" (Digital India Framework) என்ற தலைப்பில் மாவட்ட அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி.

- தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தை சார்ந்த அலுவலர்களுக்கு உணவு தானியங்களின் தரம் உயர்த்துதல், தானிய சேமிப்பு / பராமரிப்பு, நவீன சேமிப்பு முறைகள் மற்றும் பூச்சி மற்றும் நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் ஆகிய தலைப்புகளில் பயிற்சி.

- மத்திய அரசினால் 2013 ஆம் அண்டு அளிக்கப்பட்ட ரூ.3.18 கோடி நிதியுதவியுடன் திருநெல்வேலி, தூத்துக்குடி, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட செறிவான மாவட்டப் பயிற்சி. இத்திட்டத்தின் கீழ் 2016–2017 ஆம் ஆண்டு 4,394 மாவட்ட அலுவலர்களுக்கு பயிற்சியும், 1,428 அலுவலர்களுக்கு கணினி பயிற்சியும் அளிக்கப்பட்டது.

திருச்சி, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மண்டல பயிற்சி நிலையங்கள்

2016–2017 ஆம் ஆண்டில் 9,400 அரசு அலுவலர்களுக்கு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் பல்வேறு தலைப்புகளில் சுமார் 200 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

II. 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்

இந்நிலையத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களுக்கு நடத்தப்படும் அடிப்படை பயிற்சியானது அவர்களது தகுதிகாண் பருவம் விளம்புவதற்கு கட்டாயமானதாகும். இப்பயிற்சி நிலையம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது. 2016–2017 ஆம் ஆண்டில், 12 அணிகளில் 443 அலுவலர்கள் பயிற்சி நிறைவு செய்தனர்.



III. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம், சென்னை

இப்பயிற்சி மையம் மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வுகளுக்கான முதனிலை மற்றும் முதன்மைத் தேர்வு பயிற்சி வகுப்புகள் மற்றும் இவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாதிரி ஆளுமைத் தேர்வு ஆகியவற்றை நடத்துகிறது. நுழைவுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 325 மாணவர்களுக்கு முதனிலைத் தேர்வுக்கான பயிற்சியை ஆறு மாதங்களுக்கு (டிசம்பர் முதல் ஜுன் வரை) இந்நிலையம் அளிக்கிறது. முதனிலை தேர்வில் தேர்ச்சியுறும் மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்கான முனைப்பான பயிற்சி நிலையத்தால் அளிக்கப்படுகிறது. முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி மூன்று மாத காலத்திற்கு (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) 225 மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் பயின்று முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் மட்டுமல்லாமல் தமிழகத்திலிருந்து தேர்வு பெற்ற இதர மாணவர்களும் பயிற்சி மையத்தில்

சேர்ந்து முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி பெற அனுமதிக்கப்படுகின்றனர். வருமான உச்சவரம்பின்றி மாதம் ரூ.3000/– உதவித் தொகை, முதன்மைத் தேர்வுக்கு பயிற்சி பெறும் மாணவர்கள் அனைவருக்கும் படிக்கும் தகவல்களைத் திரட்டும் பொருட்டு வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கி பயிலும் பயிற்சியாளர்களுக்கு கட்டணமின்றி உணவு மற்றும் உறைவிட வசதி அளிக்கப்படுகிறது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு, புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வு நடப்பதற்கு முன்னதாகவே இந்நிலையம் மாதிரி ஆளுமைத் தேர்வு நடத்தி வருகிறது. மேலும் புது தில்லியில் ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு இல்லத்தில் சலுகைக் கட்டணத்தில் தங்கும் வசதி மற்றும் இடைநிகழ்வுச் செலவிற்கு ரூ.2000/– வீதம் வழங்கப்படுகிறது.

முதல்வர் மற்றும் இரண்டு முழு நேரப் பயிற்றுநர்கள் தவிர 20–க்கும் அதிகமான அழைப்பு பயிற்றுநர்கள், இந்நிலையத்தில் கற்பிக்கப்படும் 23–க்கும் மேற்பட்ட பாடப்பிரிவுகளில் மாணவர்களுக்கு கற்பிக்கும் மற்றும் மதிப்பீடு செய்யும் பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.



இந்நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் நிலையத்தால் நடத்தப்பட்ட மாதிரி ஆளுமைத் தேர்வில் கலந்துகொண்டவர்களில் 44 மாணவர்கள் 2017 ஆம் ஆண்டுக்கான அகில இந்திய பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குடிமைப்பணிகள் பயிற்சி மையம், மதுரை மற்றும் கோயம்புத்தூர்

சென்னையில் உள்ள அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையத்தை போன்று, அகில இந்திய ஆட்சிப் பணி / அகில இந்திய காவல் பணி ஆகியவற்றிற்கான தேர்வெழுத ஆர்வமுள்ள கிராமப்புற மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, மதுரையிலுள்ள ‘மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்’ மற்றும் கோயம்பத்தூரிலுள்ள ‘பாரதியார் பல்கலைக் கழகம்’ ஆகிய இரண்டு இடங்களில் அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இவற்றின் மூலம் 200 மாணவர்களுக்கு மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் முதனிலைத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

IV. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1974 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் இந்நிலையத்தின் முதல்வராக செயல்படுகிறார். இப்பயிற்சி நிலையம், அரசின் அனைத்துத் துறைகளிலும் உள்ள உதவியாளர்கள் / இளநிலை உதவியாளர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கிறது. கருவூலம் மற்றும் கணக்குத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்ராஜ் துறை மற்றும் வருவாய்த் துறையைச் சார்ந்த பயிற்றுநர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிலையத்தில் அளிக்கப்படும் இப்பயிற்சி திட்டத்தில் உடற்கல்வி மற்றும் கணினி பாடத்திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிலையம், 5 புதிய விடுதிகள், 8 பொலிவுறு வகுப்பறைகள் மற்றும் அனைத்து நவீன வசதிகள் கொண்டு சுமார் 500 பயிற்சியாளர்களுக்கு ஒருசேர பயிற்சி அளிக்க ஏற்ற வகையில் அமைந்துள்ளது.



பயிற்சியாளர்களின் பிரத்யேக உபயோகத்திற்காக வளாகம் முழுமைக்குமான Wi-Fi இணைய வசதி, நூலகம், உள் விளையாட்டரங்கம் மற்றும் காணொளி காட்சியரங்கம் இவற்றை கொண்டு கற்பதற்கு ஒரு இணக்கமான சூழ்நிலையை இந்நிலையம் அளிக்கிறது.

பயிற்சி நிகழ்வுகள்

பவானிசாகர் வளாகத்தில் 41 நாட்கள் அடிப்படை பயிற்சியும், கோயம்புத்தூர், சேலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் 37 நாட்கள் அடிப்படை பயிற்சியும் அரசு துறைகளைச் சேர்ந்த இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்நிலையம் துவங்கப்பட்டதில் இருந்து இதுவரை வெவ்வேறு பிரிவுகளில் 1,05,573 அலுவலர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

**6. ஆய்வுப் பிரிவு**

ஆய்வுப் பிரிவானது, அரசு துணைச் செயலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில், மூன்று ஆய்வு அலுவலர்களைக் கொண்டு, காலமுறைப்படி, அரசு அலுவலகங்களில், அலுவலர்களின் நிருவாகத்

திறனை மேம்படுத்திடவும், பொறுப்புடைமைக்கு உள்ளாக்கியும் முதனிலை ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆய்வின்போது, பணியாளர் அமைப்பு, ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல் குறித்தான கோப்புகள் பரிசீலிக்கப்பட்டு ஆய்வுக் குறிப்புகள் தயாரிக்கப்படுகிறது. ஆய்வறிக்கையில் குறைகள் ஏதும் சுட்டிக் காட்டப்பட்டிருப்பின், அது குறித்தான குறைகளைவு அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் இருந்து பெறப்படுகிறது.

இறுதி ஆய்வு அலுவலர்களான இந்திய ஆட்சிப்பணியை சேர்ந்த மூத்த அலுவலர்களால் இந்த குறைகளைவு அறிக்கை ஆய்வு செய்யப்பட்டும் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் நேரில் ஆய்வு செய்யப்பட்டும் அவர்களது பொது குறிப்புரையுடன் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். இதனை அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு உரிய தீர்வு காணும் பொருட்டு அனுப்பி வைக்கும்.

மாவட்ட அளவில், துணை ஆட்சியர் தலைமையில் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள் செயல்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகத் திறனை மேம்படுத்திடவும், சார்நிலை



அலுவலகங்களின் பணியினை நெறிமுறைப் படுத்திடவும், மாவட்ட ஆய்வுக் குழுக்களால், விரிவான மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட ஆய்வுக் குழுக்களின் மாதாந்திர பணி முன்னேற்ற அறிக்கைகள், திறனாய்வு செய்யப்பட்டு அதன் மீதான குறிப்புரைகள் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மாவட்ட ஆய்வுக்குழுவானது, மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவுடன் இணைந்து திடீர் ஆய்வினை மேற்கொள்ளவும் மற்றும் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ஒருங்கிணைந்த கூட்டங்களை நடத்திடவும் உதவி புரிகிறது.

ஒவ்வொரு ஆண்டும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறையின், ஆய்வுப் பிரிவானது, 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களுடன் இணைந்து மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்தான 2 நாட்கள் 'முன்னோடிப் பயிற்சி' மற்றும் அலுவலகக் கண்காணிப்பாளர் / மேலாளர் நிலையிலான

பணியாளர்களுக்கு 3 நாட்கள் 'குறுகிய காலப் பயிற்சி' நடத்திவருகிறது. மேலும், மாவட்ட நிர்வாகத் திறனை மேம்படுத்தும் வகையில் இளநிலை உதவியாளர் / உதவியாளர் நிலையில் 5 நாட்கள் 'புத்தாக்கப் பயிற்சி', மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களால், அந்தந்த மாவட்டத் தலைமையகங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

### 7. முடிவுரை

மாநில நிர்வாக இயந்திரத்தின் அடித்தளமாக விளங்கும் மனிதவள மேலாண்மையில் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை முக்கியப் பங்காற்றுகிறது. குறித்த காலத்தில் பணியாளர் தெரிவு மற்றும் போதுமான அளவிலான பயிற்சி ஆகியவை நாள்தோறும் எழும் நிர்வாக சிக்கல்களுக்கு உறுதியான நிலைப்பாட்டுடன் தீர்வுகாணும் திறன்வாய்ந்த பணியாளர்களை உருவாக்குவதில் உறுதுணையாக அமைகின்றது.

**D. ஜெயக்குமார்**
**மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்**
**நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.**





**25.04.2017** அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. D.ஜெயக்குமார் அவர்கள் தலைமையில், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறைக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் இயக்குநர் (ம) பயிற்சித் துறை தலைவர் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு K. ஞானதேசிகன், இ.ஆ.ப., பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை செயலாளர் முனைவர். சீ. ஸ்வர்ணா இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



2017–ம் ஆண்டு அகில இந்திய பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுடன் மாண்புமிகு அமைச்சர்,
பயிற்சி துறைத் தலைவர் மற்றும் அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு மைய முதல்வர்.



அண்ணா மேலாண்மை நிலையம்
அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்
தலைமைச் செயலக பயிற்சி நிலையம்.




அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,
பவானிசாகர்.